# அணிந்துரை

இலங்கைச் சூழலில் கொவிட்-19 பெருந்தொற்றினது நீண்டகால விளைவுகள் கவலையளிப்பனவாகக் காணப்படுகின்றன. அரசாங்கம் தொடர்பான பொதுமக்களின் திருப்திநிலையானது பெருமளவுக்குக் குறைந்தளவான இறப்பு மற்றும் நோய்க்கிருமித்தொற்று என்பதன் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. பொதுமக்கள் சுகாதார விடயங்களுக்கு அப்பால், பெருந்தொற்றானது ஆளுகையில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்துக் கவனம் செலுத்துவதில்லை. இந்நிலைமை கவலைக்குரியதாகும்.

கொவிட்-19 ஆனது நிறைவேற்றுத்துறையினைப் பலப்படுத்தல் மற்றும் இராணுவமயமாதல் போன்றன இடம்பெறுவதற்கான நியாயப்படுத்தலை வழங்கியுள்ளது. பெருந்தொற்றுக் காலத்தில் பாராளுமன்றம் சுமார் 3 மாதங்களாக கூடாததோடு பொதுநிதி தொடர்பான மேற்பார்வை எதுவும் இடம்பெறவில்லை. பெருந்தொற்றுக்கான முகாமைத்துவமானது இராணுவத் தளபதியான ஷவேந்திர சில்வாவின் தலைமையிலான சனாதிபதி விசேட செயலணிகளின் கீழ் இடம்பெற்றது. அத்தோடு வேறும் பல செயலணிகள் தற்போதைய மற்றும் முன்னைய இராணுவ அதிகாரிகளைப் பிரதானமாகக் கொண்டு ஒழுக்கமுள்ள சமூகமொன்றை உறுதிப்படுத்தவும் கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள்சார் இடங்களைக் கண்காணிக்கவும் தாபிக்கப்பட்டன. தொல்பொருள்சார் விடயம் தொடர்பான செயலணிக்கான குழுத் தெரிவில் மாகாணத்தினது பல்லின மற்றும் பன்மைத்துவம் போன்றன கவனத்தில் கொள்ளப்படவில்லை. சனாதிபதியினது அறிவித்தல் மூலம் அரசாங்கக் கொள்கைகள் என வெளிப்படுத்தப்பட்ட அனைத்தும் அவர் பிரகடனப்படுத்திய தினத்திலிருந்து ஒழுங்குவிதிகளாக மாறின. மேலும் துறைமுகநகர ஆணைக்குழு மசோதா என்பது அரசியல் கட்சிகளாலும் சிவில் சமூக அமைப்புகளாலும் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்டாலும் அதனைச் சட்டமாக்குவதற்கான அவசரம் அரசாங்கத்துக்குக் காணப்பட்டது. மசோதாக்கள் சட்டமாக நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் அவை திருத்தப்பட வேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

நிறைவேற்றுத்துறை அதிகாரத்தைப் பலப்படுத்த இராணுவமயமாதல் ஊட்டமளித்தது. அத்தோடு நிறைவேற்றுத்துறையின் அதிகாரம் மற்றும் ஆணையைப் பிரயோகிக்க இடையூறாகக் காணப்பட்ட தடைகளையும் சமநிலைகளையும் 20ஆவது திருத்தம் நீக்கி அதனைச் சாத்தியமாக்கியது. செயலணிகளுக்குப் புறம்பாக பரந்த அளவான அதிகாரங்களைக் கொண்ட இராணுவத்தினர் 25 மாவட்டங்களுக்குமான தனிமைப்படுத்தல் வேண்டுகோள்களை முன்னெடுப்பதற்கான தலைமை ஒருங்கிணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர். ஆளில்லா விமானப்படை விமானங்கள் மற்றும் இலங்கை இராணுவத்தின் அதிரடி செயற்பாட்டுக்கான றைடர்ஸ் குழு (Sri Lanka Army Quick Reaction Riders Team) போன்றன தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளை மீறுவோரை கைதுசெய்யப் பயன்படுத்தப்பட்டன. அத்தோடு சிவில் சமூகத்தின் பரப்பினைச் சுருக்குதல், வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிவில் சமூக செயற்பாட்டாளர்களைத் துன்புறுத்தல் மற்றும் அச்சுறுத்தல் கொடூரமான பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தல் என்பன தொடர்ந்தும் இடம்பெறுகின்றன. அவசரகாலச் சட்டத்தினால் முன்னெடுக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் செயற்பாடுகள் விரக்தியான அனுபவங்களைப் பொதுமக்களுக்கு ஏற்படுத்தியபோது, ஒருகட்டத்தில் அது ஒரு இயல்பான விடயமென அவர்கள் எண்ணினர். அவ்வாறானதொரு எண்ணம் பெருந்தொற்று முடிவடைந்த பின்னரும் பொதுமக்களுக்கு ஏற்படலாம். உண்மையில் அந்தநிலை பொதுமக்களுக்கு ஏற்கனவே இடம்பெற்றுள்ளது போலத்தெரிகிறது.

இந்த நூலானது சனநாயக நிறுவனங்கள், ஆளுகை, பெருந்தொற்றில் சேமநலனின் தாக்கம், இனத்துவ உறவுகள், இலவசக்கல்வி, உள்நாட்டுக்குள் குடிபெயர்ந்த தொழிலாளர்கள், அரசியல் சகாயம் போன்றன சமூகத்தில் ஏற்படுத்தும் பிரச்சினைகள் தொடர்பாகக் கேள்விகளை எழுப்புகிறது. இந்நூல் மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்களை முன்னெடுக்க ஊக்கப்படுத்தும் என்றும் அதன் மூலம் இலங்கையில் மிகச் சிறப்பான ஆளுகை மற்றும் அரசாங்கத்தினை உருவாக்குவதற்கான பங்களிப்பினை வழங்கும் எனவும் நான் நம்புகின்றேன்.

கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து,
நிறைவேற்றுப் பணிப்பாளர்,
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்.